# மாலனின் கருணை.

விண்ணிலுமில்லை, மண்ணிலுமில்லை,

விண்ணவராலுமில்லை, மண்ணவராலுமில்லை,

உள்ளிலுமில்லை, வெளியிலுமில்லை,

நள்ளிரவிலுமில்லை, பகலிலுமில்லை,

கொடிய ஆயுதங்களாலும் தனக்கிறப்பில்லையென,

கொடிய அரக்கன் கேட்ட வரத்தின் படியே,

நரனும், அரியும் கலந்ததோர் உருவில்,

வரமும் பழுதுபடாதே ஓர் முன்னிரவில்,

முடியது சிலிர்க்க, புருவங்கள் நெளிய,

நெடியதூண்தனை பிளந்துகொண்டு,

இடியென முழக்கம் செய்து கொண்டு,

படியிலமர்ந்து, சிவந்த கண்களால் நோக்கி,

பிடியில் சிக்க மறுத்தவனுடன் போரிட்டு,

மடியில் அவனை வலியஇழுத்துக் கிடத்தி,

அகமது குளிர தன் கூர்மையானதான,

நகங்களால் அவன் பரந்த மார்பினைப் பிளந்து,

மாலைவேளையில் தேவர்கள் தொழுதிட,

மாலையாக அணிந்து அவன் குருதி குடித்து,

பாலனின் கூற்றை மெய்ப்பிக்க அவதரித்த,

மாலனின் கருணையை நாமும் பெற்றிடுவோம் !